சுப்பிரமணியன்

4 பக்கங்கள் தனிப்பிரதி 0—1—0 மலேயா, சிலோன் 6 சதம். REGD. NO. M. 4004

SAMARASAM வார வெளியீடு

# சமரசம்

ஆசிரியர் : S. Md. சுல்தான் பக்தாதி

கோர்வை 13 | திருச்சி, தி. வ. ஆண்டு 1982 மாசித்திங்கள் 12-ம் நாள் (24—2—1951) சனிக்கிழமை | மணி 7

# C. N. அண்ணாத்துரை செத்துவிட்டாரா?

பத்திரிகை உலகிலேயே கையாளாத ஒரு புதுமுறையைப் பகுத்தறிவற்ற பஞ்சைப் பயல் முத்தன் தனது பத்திரிகையான "அக்கப்போரில்" "C. N. அண்ணாத்துரை செத்துவிட்டார்!" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளான்!

இதற்கு அவன் கூறும் விளக்கம் வெகு விநோதமாக விருக்கிறது.

அரசாங்கம், திராவிடநாடு பதிப்பகத்திற்கு அபராதம் போட்டு, அச்சகச் சொத்தைப் பறிமுதல் செய்ததைத் தமது நிகரில்லா இலக்கிய நடையிலே, ஒன்பதே வயதை அடைந்திருக்கும் சிறுவன் (திராவிட நாடு பத்திரிகை) குரல்வளை நெறிக்கப்பட்டது! என்று தீட்டி இருந்தார் தோழர் அண்ணாத்துரை!

இதைப் புரிந்து கொள்ள முடியாத மட்டரக மூளை படைதத முத்தன், பதிலுக்குப் பதில் வஞ்சம் தீர்த்துக் கொண்டானும் "C. N. அண்ணாத்துரை செத்துவிட்டார்" என்று எழுதி! எவ்வளவு அடிமுட்டாள் இந்த முத்தன் என்பதைப் பொதுமக்களே கூறுங்கள்!

எங்காவது மடங்களிலே வயிற்றுச் சோற்றுக்குத் தூந்தனா போட்டு கொண்டிருந்த முத்தா! இப்பொழுது பிழைக்கும் வழிதெரிந்து விட்டதா உனக்கு? பண்டாரப் பயலாகிய உனக்குப் பண்பு மிக்க அரசியல் தலைவர்களை எப்படித் தாக்குவது என்று எங்கே தெரியப் போகிறது!

சுதந்திரம் பெற்ற நான்கு ஆண்டுகளாக மக்கள், பசியாலும் பட்டினியாலும் வாடும் இந்த நாளிலே, திராவிடத்தின் ஒவ்வொரு விவசாயியும் உழைத்து உழைத்து அலுத்தாலும் உண்ண உணவின்றித் துடிக்கும் இந்நாளிலே உணவைப் பதுக்கும் சண்டாளர்களை அடக்க முடியாத கையாலாகாத 6 அவுன்ஸ்மந்திரிகளை தம் கடமையை உணரும்படி செய்தால் உனக்குப் பொத்துக் கொண்டு வருகிறது!

சுவாமிகாள்! தேவைக்குமேல் 40 சதவிகிதம் உற்பத்தியாகும் ஆலை நூல் திருட்டுத்தனமாக வடநாட்டு

## ஈனப்பயலுக்கு புத்தி எப்படி வரும்?

## முட்டாள் முத்தனுக்குச் சவுக்கடி!

முதலாளிக்கு சப்ளை செய்யப்பட்டு நம் நாட்டின் ஆயிரக்கணக்கான குடிசையில் வாழும் கைத்தறி நெசவாளர் கஞ்சிக்கு இல்லாமல், மதுரையிலும், சேலத்திலும் இன்னும் பல ஊர்களிலும் மடிகிறார்களே எதாவது தெரியுமா? உனக்கு?

அட பண்டாரப் பயலே! நம் மாகாணத் துணியை, பர்மாவுக்கும். மலேயாவுக்கும். தாய்லந்துக்கும் பீஹாருக்கும, ஒரிஸாவுக்கும். ராஜஸ்தானுக்கும் அனுப்பும் மந்திரிகள். வடநாட்டிலிருந்தோ பர்மாவிலிருந்தோ அரிசி கொண்டுவந்தால் டாலர் குறைந்துவிடும்; சென்னை மக்கள் செத்தால் எமக்கென்ன என்று இருக்கிறார்களே, இது உனக்குத் தெரியுமா?

## நெஞ்சு பொறுக்குதில்லை!

பச்சிளம் குழந்தைகள் பசித்திட நொந்திட,
பிச்சை பிச்சையென பெரும்படை திரண்டிட,
நச்சரித்திடும் நானிலம் நலிந்திட நாணிட
பச்சையாய் வந்தனர் பல்லாயிரம் சேணியர்!

பஞ்சு கொழித்திடும் பைம் பொழில் பூண்டதோர் நாடு,
துஞ்சித துடிக்கு தெனறால் இந்த நெஞ்சம் பொறுக்குதில்லை!

வஞ்ச உளம் படைத்தார் வகையில்லா ஆட்சிதன்னில்
வெஞ்சமர் பூண்டிட வீறு கொண்டெழுந்தனர்!

ஆலைகள் தூங்கிட, அபலைகள் அரும்தறி அசந்திட
சோலைகள் சூம்பிட, சோறின்றி வாழ்ந்திட
வேலைகள் ஒழிந்திட வீணர்கள் கொழுத்திட
மாலைகள் சூடி மகிழ்கின்றார் இம்மடையர்கள் நாட்டிலே!

ஒழிப்போம் உலுத்தர் கூட்டம் தன்னை!
அழிப்போம் அறிவீனர் அவைக் களத்தை!
செழிப்போம் செல்வச் செருக்கினிலே
செங்கதிர் தோன்றிடும் சீர்பெரு திராவிடத்தில்!

—அழகவ்பன்.

அமெரிக்காவிடமிருந்து டாலரைக் குவித்து கொள்ளை லாபம் அடிக்க எண்ணும் டாடா பிர்லாக்களுக்கு தென்னாட்டான் சாவதைப் பற்றிக் கவலையில்லாவிட்டால் நாங்கள் அதைக் கண்டிக்கிறோம்! மக்கள் விழித்துக் கொண்டால் வட நாட்டார் ஆதிக்கம் வந்தவழியே தொலைந்து விடுகிறது!

அட சோற்றுக்கு அலையும் அன்னக்காவடி! உனக்கு எத்தனை சவுக்கடி கொடுத்தாலும் சூடு, சொரணை இருந்தாலல்லவா சிந்திக்கப் போகிறாய்! கும்பகோணத்தில் உனக்குப் பாதுகாபட்டாபிஷேகம் நடந்ததால் சென்னைக்கு ஓடினாய்! இரண்டு மாதம் செத்தொழிந்தாய் என்றிருந்தோம். இன்று மீண்டும் உன் நாற்ற வாயைத் திறக்க ஆரம்பித்துவிட்டாய்! ஆகவே அரசியலே தெரியாத ஆண்டிப் பயலாகிய உன்னை இப்படியே விட்டுவிட்டால் உன்னுடைய மலம் வீசும் வாயின் நாற்றம் தமிழகத்தை.—தமிழன் மானத்தை மாசுப்படுத்தி விடும்! உன்னுடைய தரங்கெட்ட எழுதுகோல் பத்திரிகை ஆசிரியர்களேயே வெட்கித் தலை குனிய வைக்கும்! என்? இப்படியும் ஒரு மிருகத்திற்கு ஆசிரியர் பட்டமா என்று!

ஆயிரம் சாதியை உண்டாக்கி அதன் பயனைக்கொண்டு இரண்டு ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்த ஆரியர். கொட்டத்தை அடக்குவோம் என்று துடிதுடிக்கும் அறிஞர் அண்ணாத்துரையை "C. N. அண்ணாத்துரை செத்துவிட்டார்!" என்று எழுதுகிறாயே இதிலிருந்தே நீ திட்டக் கூடத் தெரியாத திண்ணை தூங்கிப் பயல் என்று தெரிகிறதல்லவா!

ஒரே இறைவன், ஒருவனே தேவன் என்று முழங்கும் அண்ணாவை நாஸ்திகன் என்று கூறி மக்களிடம் இருந்துபிரிக்க நினைக்கும் முத்தன் என்றபித்தா! பார்ப்பான்காலைகழுவி குடிக்கும் கோதிப் பயலாகிய உனக்குத் தன்மானம் எங்கே வரப் போகிறது! தேவடியாள் மகனே (சூத்திரனே) என்றுபட்டம் கட்டினாலும் ஏற்றுக்கொண்டு அந்தப் பார்ப்பானுக்கு வக்காலத்து வழங்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

"சமரசம்"
(சந்தா விவரம்)
உள் நாடு.
1-வருடம் ரூ. 4—0—0
6-மாதம் 2—2—0
இலங்கை.
1-வருடம் ரூ. 5—0—0
6-மாதம் 2—8—0

'சமரசம்'
1951-ஆம் பிப்ரவரி-மீ 24-உ

# பாக்கிஸ்தானின் பகற்கொள்ளை!

## 2

1950 ஜூன் முதல் தேதியிலிருந்து 8-ம் தேதிக்குள் ஒரே ஒரு வாரத்திற்குள், வெளி நாட்டு இறக்குமதி ரூ 18 கோடியை எட்டி விட்டது பாக்கிஸ்தானில்!

பிரிக்கப் படாத இந்தியாவில் முழுக்க முழுக்க ஒரு ஆண்டு பூராவும் தலை கீழாக நின்றாலும் 30 கோடி ரூபாய்களுக்கு மேல் இறக்குமதி செய்ய முடியாத வெளி நாட்டுத் துணிச் சரக்குகள், ஒரு வாரத்தில் 18. கோடியை அள்ளித்தந்தது பாக்கிற்கு!

மூன்றே வயதை எட்டிப் பிடித்த பாக்கிஸ்தானில் நடக்கும் அதிசயத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்து போன அனுபவமிக்க ஜப்பானிய இறக்குமதி வர்த்தக இலாகா பாக்கிஸ்தானில் நிலைமையை அறிந்துவர தூதுகோஷ்டி அனுப்பி இருக்கிறது!

300 ஆண்டுகளாக பிரிட்டிஷ் பொருளாதாரப் பிரபுக்களுக்கு அடிபணிந்து கிடந்த இந்த நாட்டில், பிரிட்டனின் ஸ்டர்லிங் மதிப்பை பாக். ரூபாய்க்கு 2/2 ஷில்லிங் வீதம் குறைத்ததன் மூலம் மண்டையில் அடிகொடுத்தது பாக்கிஸ்தான்!

அதேசமயத்தில் இந்தியா, ரூபாய்க்கு 16 ஷில்லிங் வீதம் பிரிட்டிஷ் ஸ்டர்லிங் மதிப்பை ஏற்றுக் கொண்டு அவதிப் படுகிறது!

பிரிட்டனுக்கு பாக் வளைந்து கொடுக்காது நாணய மதிப்பை ஏற்படுத்திக் கொண்டதால், ஒரே ஒரு மாதத்தில், வெளி நாட்டு பாங்குகளின் 200 கோடி ரூபாய்கள்—பாக்கின் ஹபீப் பாங்கில் குவிந்தது!

நம்முடைய (இந்தியாவின்) ஸெண்ட்ரல் இந்தியா, இம்பீரியல் பாங்குகள் பணமுடையால் தவிக்கும் போது பாக்கின் ஹபீப் பாங்க் ஏழுமட்ங்கு அதிக 'பிஸினஸ்' செய்திருக்கிறது!

இப்படி எக்கசக்கமாகக் குவியும் வெளி நாட்டுப் பணத்தால் 75 சதவிகிதம் டிபாஸிட் செய்யாத எந்த நாட்டுப் பணமும் ஏற்றுக கொள்ளப் படமாட்டாது. என்கிறது செருக்கிலே மிதக்கும் பாக்கிஸ்தான்!

### பொன் குவியும் பொற் சுரங்கம்!

பாக்கின் பொருளாதார எதிர்காலம் மிகவும் தெளிவாக இருப்பதால் நீடித்த வியாபாரம் நடத்த ஜப்பானிலிருந்தும், ரஷ்யாவிலிருந்தும் பிரதிநிதிகள் 18. மாதகாலமாக கராச்சியில் முகாம் போட்டு விட்டார்கள்!

ஸ்பெயின், போர்த்துகல், ஹங்கேரி போலந்திலிருந்தும் நீடித்த வர்த்தகம் விரும்பி பிரதிநிதிகள் வந்துவிட்டனர்!

### பிரிந்து வாழ்வது சாத்தியமே அல்ல!

மூலப் பொருள்களான, பஞ்சும், சணலும் பழமும் கோதுமையும் கொழிக்கும் பகுதிகளை பாக்கிஸ்தானுக்குக் கொடுத்து விட்டு, வெறும் ஆலைகளை இந்தியாவுக்குக் கொடுத்தால் மூலப் பொருள்களுக்கு எங்கே போவது?

எல்லாத் தோல் பதனிடும் சாலைகளும் இந்தியாவில்; ஆனால் தோல் உற்பத்தி எல்லாம் பாக்கில்! ஒரே ஒரு தோல் பதனிடும் ஆலைதான் லாஹூரில் இருக்கிறது!

9 கோடி பாக்கிஸ்தானிகளுக்கு 30 கோடி மக்களுக்கு உணவளிக்கக் கூடிய மேற்கு பஞ்சாப் வெகுமதியாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது!

முரண்பட்ட இந்தப் பொருளாதார அமைப்பு மாறி இந்தியா—பாக் ஒன்று பட்ட பொருளாதாரம் இயங்கினால் உலகையே ஒரு குலுக்கு குலுக்கி விடலாம்!

1950 ஆண்டிலே ரூ 54 கோடி—ரூபாய்க்கு, ஆலைக்குரிய கருவிகளை இறக்குமதி செய்திருக்கிறார்கள்! முக்கால் பங்கு. பாலைவனப் பிரதேசமான பாக்கிஸ்த்தானில் உருப்படியாகத் தெரிவது காரச்சி, ஹைதராபாத், லாஹூர், ராவல்பிண்டி, பெஷாவார், குவெட்டா, டாக்கா, சிட்டகாங் போன்ற நகரங்கள்தான்!

காங்கிரஸ் அரசாங்கத்தின் கையாலாகாத்தனம் காரணமாக 1400மைல் திறந்தவெளியானஎல்லையில் 30 கோடி ரூபாய் பெறுமான துணிகள் திருட்டுத்தனமாக பாக். செல்கிறது!

பயனற்ற ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாடு என்ன செய்யும்? பின் வாசலில் கடத்தும் பாக்—நாட்டைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான்!

பிரிட்டிஷ், சைக்கிள் இந்தியாவில். ரூ 190 ஆனால் பாக்-கில் ரூ. 90 தான்! இந்தியாவில் வெளி நாட்டு சில்க் ஒரு பவுண்டு ரூ 6 ஆனால் பாக்கில். ரூ 2-12-0 தான்! பத்து பவுண்டு பாக்கிலிருந்து கடத்தப்பட்டு விற்கப்பட்டால் ரூ 50 அடித்து விடலாம் இந்தியாவில்! இந்த லட்சணத்தில்—இந்தியாவின் பொருளாதார நிபுணர்களான மத்தாய், முக்கர்ஜி, நியோகிகள், தேசீயத்தற்கொலை செய்து கொள்ள வேண்டியதுதான்!

இந்தியாவின் துணியை எந்தவழியிலும் பெற்றுக் கொள்ள ஆசையுள்ள பாக். முயற்சியை உதாசீனம் செய்ய முடியாது மலிவும், நீடித்து உழைக்கும் தன்மையும் நமது துணிக்கு உண்டு. இந்தியா மட்டும் அனுமதித்தால் கோடிக் கணக்கான கஜம் துணிகள் பாக்கிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்ய முடியும்!

இந்தியா, மலேயாவுக்கும். ஹாங்காங்கிற்கும், தூரக்கிழக்கு நாடுகளுக்கும் அனுப்பும் துணி, மீண்டும் விலாசம் மாற்றப்பட்டு பாக்கிஸ்தானுக்கு கப்பலேற்றப்படுகிறது. பாக்கின் நாணய உயர்வின் காரணமாக மிகவும் மலிவாகவே பாக்கிஸ்தானுக்குக் கிடைக்கிறது.

நான் பாக்கிஸ்தானில் இருக்கும் பொழுது, நாம் 400 பவுண்டு எடையுள்ள ஜவுளி 114 பவுன் விலை நிர்ணயித்து விற்கும் போது 90 பவுனுக்கு பக்தாதிலிருந்து காரச்சிக்கு 13 லட்சம் பேலுக்கு ஆர்டர் வருகிறது!

சிங்கப்பூரிலிருக்கும் ரஞ்சித் சிங் என்ற பேர்வழி, பல ஆயிரக் கணக்கான பேல கோயம்புத்தூர் நூலை சைனா நூல் என்று பாக்கிஸ்தானில் விற்கிறார்! இம்மாதிரி பாண்டிச்சேரியிலிருந்தும் வெளியேறுகின்றது!

மூலப்பொருளுக்குத் திண்டாடும் இந்தியா, பாக்கின் குறுக்குவழி வியாபார முறைகளை அனுமதிக்கும் தோர்க்கர் பார்? வர்த்தக இலாகாவா? நிதி இலாகாவா? அல்லது ஜவுளிக்கமிஷனரா?

நாணய மதிப்பைக் குறைத்துக்கொண்டு உருப்படாத தேசங்களான ஜப்பானும் ஜெர்மனியும் யுத்தத்தில், மூழ்கிப் போகவில்லையா?

இங்கிலாந்து நாணய மதிப்பிழந்து முதல்தர வல்லரசாயிருந்த ஒருநாடு இன்று ஐந்தாவது வல்லரசாக இறங்கிவிடவில்லையா?

### திருச்சி ஜில்லாபோர்டில் காங்கிரஸ தில்லுமுல்லு!

திருச்சி ஜில்லா போர்டு காங்கிரஸ் தலைவரை முறியடித்து வாகைமாலை சூடியவர் இன்றைய ஜில்லா போர்டு தலைவர்!

இந்த நிலைமையைக் கண்டு காய்ச்சல் கொண்டு அலையும் காங்கிரஸ் தோழர்கள், காங்கிரஸுக்கு மெஜாரிடி தேட புதிய சாணக்ய முறைகளைக் கையாள ஆரம்பித்து விட்டார்கள்.

புதுக்கோட்டைக்கு பிரதிநிதித்துவம் என்ற பெயரால் 6 காங்கிரஸ் சட்டைகளைப் புகுத்த காமராஜர் சென்னை சர்க்காருக்கு ஆலோசனை கூறி இருப்பதாக அறிகிறோம்.

திருச்சி மாவட்டத்தின் 18 லட்சம் மக்களின் விருப்பத்திற்கு எதிராகச் செய்யப்படும் இந்தச் சதி முறியடிக்கப்பட வேண்டும்.

### குளித்தலையில கருப்புக்கொடி வழக்கு!

10-1-51 உ குளித்தலை வழியாகச் சென்ற டெல்லி மந்திரி மெஹதாபுக்கு கருப் க்கொடி காட்டிய தோழர் மீது தொடரப்பட்ட வழக்கு 9-2-51ல் சப்மாஜிஸ்ரேட் முன்பு விசாரணைக்கு வந்தது. பெருவாரியான பொதுமக்கள் விசாரணையின் போது குழுமியிருந்தது குறிப்பிடத்தக்கது.

---

இன்றைய நிதி மந்திரியின் சிஷ்யராயிருந்த குலாம் முகம்மதுவை ஒரு வழிக்கு ஒப்பந்தத்துக்கு இழுக்க முடியாதா?

இந்தியாவும். பாக்கும் ஒரு உறவை ஏற்படுத்தி விட்டால், பின்பு பர்மாவையும், சிலோனையும், இந்தோனேஷியாவையும் நம்முடன் கூட்டாளிகளாக்கி ஒரு "நபா முகாம்" ஏற்படுத்த முடியும!

அந்த முகாம் பிரிட்டிஷ் ஸ்டர்லிங் அடிமைச் சங்கிலியிலிருந்து விடுபட உதவும்.

அப்பொழுதுதான் இந்திய பாக்கிஸ்தானின் ஐக்யப்பட்ட பொருளாதாரம் மிகவும் பலமுள்ளதாகஇயங்க முடியும்

"பிளிட்ஸ்" பத்திரிகையில்
K. V தேவித்ரி.
இந்தியாவின் முன்னாள் உதவி கொள்முதல் அதிகாரி

# சந்தி சிரிக்கிறது!

(மிஸ்டர் சரடு)

திருச்சி கலெக்டர் ராஜிநாமாவுக்கும் T. S. S. ராஜனுக்கும் சம்பந்தமிருப்பதாகக் கூறும் செய்தி தவருனது!

—சென்னை சட்டசபையில் மந்திரி கோபால் ரெட்டி

ரெட்டியார் சொன்ன, சொன்னதுதான்!

—அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரர்.

* * *

உற்பத்தி பெருகாதவரை நாடு சுபிட்சமடையாது.

—நேருஜீ

நூல் கிடைக்காததால் நெசவாளர் உற்பத்தி செய்ய முடியாமல் தவிக்கின்றனர்! பட்டினியால் சாகின்னர்! கலெக்டர் ஆபீஸ் முன் மறியல் செய்கின்றனர்! நூற்றுக்கணக்கில் கைதாகின்றனர்!

— தினத்தாள்கள்.

* * *

பஞ்சம்! பசி! சாவு!

சென்னைச் செய்தி

நீங்கள் புண்ணாக்கைச் சாப்பிட முடியாவிட்டால் முன்ஷி என்ன செய்வார்?

—முன்ஷியின் சிடர்!

* * *

பட்டினிச் சாவு அதிகரித்து விட்டது! மக்கள் திருடவும் ஆரம்பித்து விட்டார்கள்! என் கொலைகளும் நடக்க ஆரம்பித்து விட்டன!

"திராவிடநாடு"

இந்தப் பத்திரிக்கைக்கு இதுதான் வேலை! எவன் செத்தால் என்னவாம் இதுகளுக்கு! எமன் அத்துமீறி நடந்தால், நம் மந்திரிகள் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்காமலா இருக்கப்போகிறுர்கள்!?

* * *

ஆரியர் வருகைக்குப்பின் திராவிட நாகரீகம் சீர்குலைந்து சாதி, சமயப்பூசல் மலிந்தன!

ஒரு ஐந்தாம் வகுப்பு மாணவன்

திராவிடநாடு என்று ஒன்று இருந்ததாக சான்று கூற முடியுமா?

ம. போ. சி.

* * *

முத்தன் போன்ற அசடுகள் தேர்தல் பிரசாரத்துக்கு லாயக்கில்லை மக்கள் மனதை இழுக்க ம. பொ. சி. க்கள் வேண்டும்!

—ஒரு விஷயம் தெரிந்த காங்கிரஸ்காரர்

காங்கிரஸ் பத்திரிக்கை எல்லாம் ம. பொ. சி யை வானளாவப் புகழ்வது எதற்கு என்று இப்பொழுது புரிகிறதா?

—மிஸ்டர் உண்மை

—○—

# அன்னக்காவடிப் படைக்கு கேப்டன் முத்தன்!

சருப்புக்குப் பயந்து, கடலங்குடித் தெருவில் கட்டையடிபட்டு சோற்றுக்குத் தாளம் போட்டு சொல்லாமல் சென்னைக்குக் கம்பி நீட்டிய சோம்பேறிப் பயல் முத்தன் மீண்டும் தனது அக்கப்போர் குப்பையைக் கிளப்ப ஆரம்பித்து விட்டான்.

வாருங்கள்! வாருங்கள்! என்று அழைக்கிறுன் தொண்டர் படையில் சேரும்படி! தொண்டர் படை எது என்று உங்களுக்குத் தெரியுமா? அதுதான் தோளிலே அன்னக் காவடியைச் சுமந்துகொண்டு விபூதி மயமாய் வீடுதோறும் சென்று 'அம்மா தாயே சோறு போடுங்கள் அன்னக் காவடிக்கு' என்று கூறி அகப்பட்ட சாதத்தைக் கொண்டு வந்து கேப்டன் முத்தனுக்கு முதலில் போட்டுவிட்டு மிச்சம் மீதாரியைத் தொண்டர் படைக்குழாம் சோம்பேறி சோணசலங்கள் தின்று கொழுத்துத் திரிவது தான். நண்டு கொழுத்தால் வளையிலிருக்குமா என்றபடி தின்று கொழுத்த திமிரினல் திராவிடக் கழகத்தினரைத் தாக்கிப் பேசுவது கூட்டத்திலே, செம்மையாக உதைபடுவது, போலீஸ் தயவினல் ரயில்வே ஸ்டேஷனை நாடி தப்பிப் பிழைத்தோம் என ஓடுவது! இதற்குத் தானய்யா முத்தன் முழு மூச்சுடன் பட்டாளம் திரட்டப் படாதபாடு படுகிறுன்! முன்பு கும்பகோணத்திலிருந்தாலும் கோணமூக்கு (கொக)ப் படைகளை திரட்டி விருப்பான். இன்று சென்னையிலே இந்த சோம்பேறிப் பயல் வெத்து வேட்டு செல்லுமா?

படை திரட்டிக்கொண்டு திராவிட கழகத்திற்கு எதிராக எதிர் மறியல் செய்யப் போகிறதாம் இந்த முண்டம்: தைரியமிருந்தால் செய்து காட்ட முடியுமாடா தடிப்பயலே? வேண்டுமானல் நீ பேசும் கூட்டங்களுக்கு அவசியம் உன் பாதுகாப்புக்காக ஒரு சோம்பேறிப் படை தேவை என்று சொல். அதில் அர்த்தம் இருக்கிறது. அதைவிட்டு காங்கிரஸ் கட்சிக்கு என்றும், ஆஸ்திகத்துக்கு என்றும் படை திரட்டப் போவதாக சரடுவிடும் சண்டிமாடே! புனிதமான காங்கிரசின் பெயரையும் அதன் உன்னதக் கொடியையும் பற்றி உன் ஊத்தை வாயால் உச்சரிக்காதே. அதற்கு அருகதையற்ற ஆண்டிப்பயல் என்பதை எண்ணியே நீ சர்க்கார் எவ்விதத்திலும், நமது படையைப்பற்றி சந்தேகம் கொள்ள வேண்டாம் என்று முன் கூட்டியே எச்சரிக்கை செய்வதிலிருந்து புரிந்து விட்டதல்லவா உன் யோக்கியதை. நீ சர்க்கார் துரோகி மட்டுமல்ல. மனித இனத்துக்கே ஒரு மாபெரும் துரோகி என்பதை எண்ணிப்பார். இல்லாவிட்டால் சுதந்தரம் பெற்ற நாட்டில்—மக்களாட்சியில் மக்களை ஒழிக்கும் சதிப் படை திரட்ட திட்டம் போடுவாயா? உயிருடன் உலாவும் அறிஞரை செத்துவிட்டார் என்று தீட்டுவாயா?

—சாட்டையார்.


## நீங்கள் உபயோகித்தீர்களா?






## விபாரம் பெருக சமரசத்தில் விளம்பரம் செய்க!



## பிரதிக்கு முந்திக் கொள்ளுங்கள்!

அணுகுண்டைக் காட்டி ரஷ்யாவை அடக்கிவிட எண்ணும் டாலர் ஏகாதிபத்தியம் ஒரு புறம்! பசியையும், பட்டினிச்சாவையும் பயன் படுத்தி கம்யூனிஸத்தைப் பரப்பத்துடிக்கும் ரஷ்யா ஒரு புறம்!

நேரு, ஸ்டாலின் ட்ரூமன் முதலியோரே குழம்பிக் கொண்டிருக்கும் ஒரு பிரச்னையை நண்பர் "அம்பலம்" தமது மூன்றுவது உலக யுத்தம் மூண்டால்......... வெற்றி யாருக்கு ரஷ்யாவுக்கா? அமெரிக்காவுக்கா? என்ற நூலில் தெளிவான அரசியல், ராணுவ ஆராய்ச்சியின் மூலம் சரியான முடிவை வெளியிடுகிறுர்

தனிப்பிரதி விலை 0-2-6 விற்பனைக்கு 100 ரு 12

விபரத்திற்கு:—

சமரசம் நிலையம்.
பாலக்கரை, திருச்சி.



## ஸ்ரீ வாசுதேவா பாங்க் லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: மாயனூர். | கிளை ஆபீஸ்கள்: ஸ்ரீரங்கம் & திருச்சி, (பாலக்கரை)

பிக்ஸட் டிபாஸிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பில்கள், டிராப்ட்டுகள், உண்டியல்கள், வசூல் செய்தும் மாற்றியும் கொடுக்கப்படும். மற்ற விபரங்கள் நேரில் தெரிந்து கொள்ளலாம்.

N. V. ஸ்வாமிநாதன்,
மேனேஜிங் டைரக்டர்.

## கேட்டுப் பாருங்கள்.

"பறவை அரசு"

புகழ் வாய்ந்த நடிகர்களைத் திட்டுவதையே தொழிலாக்க் கொண்டு நடத்தும் சில சில்லுண்டிப் பத்திரிகைகளுக்கு நடிகர்கள் ஏன் பதில் சொல்லுவதில்லை?

**—M. கந்தசாமி, திருச்சி.**

*வெறி நாய் கடிக்கிறதே என்று திருப்பிக் கடித்தல் விவேகமாகாது என்று நினைப்பதால்தான்.*

* * *

கந்தப் புராணங்களையே படமாக எடுத்துக் கொண்டிருந்த சென்னை ஸ்டுடியோக்கள், இன்று வேலைக்காரி, வாழ்க்கை, மந்திரிகுமாரி, மர்மயோகி முதலிய படங்கள் எடுக்குமளவு ஓரளவு முன்னேற்றம் ஏற்படக் காரணம் என்ன?

**—S. குருசாமி, தஞ்சை.**

*தமிழகத்தில் வீசும் பகுத்தறிவுப் புயலும், விழிப்புணர்ச்சியும்தான்!*

* * *

சென்னை மாகாணத்திலுள்ள தினசரி, வார, இதழ்கள் எத்தனை என்பதை அறிவிக்க முடியுமா?

**—V.P. பசுபதி, வெள்ளூர்.**

*இதுவரை நடந்து செத்தவையெல்லாம் சேர்த்தா? அல்லது நடப்பவைகளையா? எல்லா விவரங்களும் தெளிவாகத் தெரிய வேண்டுமானல் சர்க்கார் விளம்பர இலாக்காவுக்கு எழுதினல் புரிந்து விடுகிறது.*

* * *

சுபாஷ் போஸ் எங்கிருக்கிறார் என்பதைத் தெரிவிப்பீர்களா?

**—R. முக்காளி, எடப்பாடி,**

*இதில் என்ன சந்தேகம்? நம் எல்லோருடைய உள்ளத்திலும் தான் இருக்கிறாரே!*

விபூதி வீரமுத்து விலாசம் என்ன?

**—R. காளி, எடப்பாடி.**

47, வெள்ளாளத் தெரு,
புரசவாக்கம்,
வேப்பேரி, சென்னை.

சார்! காதல் செய்யலாமென்று தோன்றுகிறது எனக்கு, என்ன செய்யலாம் என்று ஒரு யோசனை சொல்ல முடியுமா?

**—N. ராமலிங்கம், புதுவை**

*அட...டே! பெரியவியாதியாச்சே அப்பா! இந்த மாதிரி வேலையில் ஈடுபட்டால் ஒரு வேளை சாதலில் முடிந்தாலும் முடியலாம். ஜாக்ரதை!*

* * *

60 பட்டங்கள் கொடுக்க வந்த வீரமுத்துக்கு பரிசு என்ன கொடுக்கலாம்?

**—M. ராசு, மதுரை.**

*பார்பர் ஷாப்புகளில் உள்ள பழைய கத்திகளைத்தான் பரிசளிக்க வேண்டும்.*

* * *

வாங்க பிரியாணி, வாங்க ஆட்டேலும்பு என்று சாமிகள் எழுதும் கரத்திலா இந்த சொற்கள் எழுதப்பட வேண்டும்?

**—G. சூசை, திருச்சி.**

*கருவாட்டுக் கடையைச் சுற்றித் திரியும் கருவாட்டுக் கடை சிங்கம் தானே? எலும்பு கடிக்கிற புத்தி தானே இதற்கு இருக்கும்?*

* * *

நான் ஒருநடிகையாக விரும்புகிறேன் அதற்குரிய அழகு கல்வி, இசைப் பயற்சி எல்லாம் வாய்க்கப் பெற்றிக்கிறேன்! யாரிடம் முயற்சிக்கலாம்?

**—D. சரோஜினி, மதுரை.**

*அழகு என்றால் .....நடையழகா? இடையழகா? தொடையழகா? என்று நான் கேட்கப் போவதில்லை! நாளைக்கு உங்களைத் தெரிந்தெடுக்கும் டைரக்டர் கேட்டாலும் கேட்பார்! ஒழுக்கமில்லாத இந்த பாடாவதித் தொழில் உனக்கெதுக்கம்மா?*

பெண் என்றால் வஞ்சகப் பேய்கள் என்பது என் அபிப்பிராயம்! உங்கள் அபிப்பிராயம் என்ன?

**S, கருணாகரன், காரைக்குடி.**

*ஆசாமி யாரிடமோ ஏமாந்துவிட்டீர் போலிருக்கிறது, பணம் மட்டுதான் போச்சா. மானமும் சேர்த்துக் கரைஏறி விட்டதா? ஐயா! ஒழுக்கத்திற் சிறந்த பெண்களும் உண்டு ஐயா!*

பாட்டிக் கதைகள் எடுப்பதிலேயே ஸ்ரீனிவாசன் கவனம் செலுத்துகிறாரே! காரணம் என்னவோ?

**T. ராமானுஜம், கோவை.**

*பணத்தையே குறிக்கோளாய் உள்ளவர்களுக்குப் புராணப்படங்களும், பாட்டிக் கதைகளும் தான் கிடைக்கும்! நாட்டைக் குட்டிச் சுவராக்க இதைக் காட்டிலும் என்ன சேவையை எதிர்பார்க்கிறீர்!*


இலங்கையில் இணையற்று விளங்கி
வெற்றிக்கொடி நாட்டிவரும்

**903 ஸ்டீம் பீடிகள்**

**903 தங்கக்குதிரை சுருட்டுகள்**

எங்கும் தனது இனிய மணமும், சிறந்த குணமும்,
உயர்ந்த பண்பையும் விளக்கி வருகிறது.

**வாங்கி உபயோகியுங்கள்! எங்கும் கிடைக்கும்.**

N. B. அப்துல் கபூர், பாலக்கரை, திருச்சி.



**E.A.L.**

**சந்தனாதி தைலம்**

வாசனை **ஊதுபத்திகள்**

கண்ணுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும் அதியற்புத தைலம்.
இனிய மணத்தை வீசும் இணையற்ற பத்திகள்
இன்றே உபயோகித்துப் பாருங்கள்!

E. அப்துல் லத்தீப் சாயபு, பாலக்கரை, திருச்சி.



மனிதனுக்கு மனிதன் போக்கு வித்தியாசமுண்டு.
வட்டாரத்திற்கு வட்டாரம் மொழி மாறுபடுவதுண்டு;
ஊருக்கு ஊர் உடை புதுமையாவதுண்டு!

இவ்வளவு மாறுபாடடையும் மக்களை நொடிப்பொழுதிலே ஒரே ஒற்றுமைக் கயிற்றிலே பிணைத்து விடுகிறது

**ஸ்டார் புகையிலை**

ஸ்டார் புகையிலை TRADE MARK மார்க் சிவபுரி

இதனை உபயோகிப்பதில் மக்கள் தங்களின் இன, உடை, மொழி வித்தியாசங்களைக் காட்டிக்கொள்வதில்லை. நமது நாட்டின் இலட்சியமும், ஒற்றுமை; ஸ்டார் புகையிலையின குறிக்கோளும் ஒற்றுமைதான்!

தயாரிப்பவர்கள் :
**மீ. ந. அ. செய்யது இப்ராம்ஸா & சன்ஸ்.,**
புதுக்கோட்டை


1 பக்கம் தொடர்ச்சி

ஈனப் பயலுக்கு எங்கேயடா புத்தி வரப்போகிறது!

இன்றைக்கும் வெள்ளையனுடன் உறவாடி வெள்ளையனின் 500 கோடி ரூபாய் மூலதனத்தை இந்தியாவில் அனுமதித்து ஆர்விடோக்குதுரைகளை அனுமதிக்கும் வடநாட்டானையும், வெள்ளையனையும் துரத்த எண்ணும் அண்ணாத்துரையை அறிந்து கொள்ள முடியாத முட்டாளே, மூடு உன் நாற்றவாயை!

திராவிடர்களைச்சூழ்ந்த இருள் நீங்கும் வரை கருப்புச்சட்டையை இளைஞர்கள் அணிந்துமக்களுக்கு உண்மை நிலைமை எடுத்துகாட்டுவார்கள்.

உன்னைப் போன்ற பித்தர்களை சவக்குழியில் தள்ளி மூடவும் அந்தக் கறுப்புத் துணியே பயன் பெறும்! சாவதற்குமுன் திருந்துவாயா?

**திராவிடன்.**

ஆசிரியரும் வெளியிடுபவரும்: சே. மு. சுல்த்தான் பக்தாதி, அச்சிட்டது: இஸ்லாமியா அச்சகம், பாலக்கரை, திருச்சிராப்பள்ளி.